REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 24உ சனி (7—5—55) ★ ★ வெளியூர்: சித்திரை 25உ ஞாயிறு (8—5—55) [இதழ் 279

தேர்தலுக்கு நிற்க ஆள் தேவை!

புதுவையிலிருந்து வெளியாகும் இதழ் ஒன்றில், சமீபத்தில் நடைபெற இருக்கும் தேர்தலில்நின்று போட்டியிட ஆட்கள் தேவை என்று விளம்பரம் காணப்படுகிறதாம். அவர்களுக்கு, கீழ்கண்ட தகுதிகள் இருக்க வேண்டுமென்று அந்த விளம்பரம் கூறுகிறதாம்:

(1) இந்தியாவின் ஐக்கியத்தில் நம்பிக்கையிருக்க வேண்டும்; நாட்டிடம் விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

(2) வாக்காளர்களாகவும், தேர்தலில் போட்டியிட உரிமை பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

(3) மொழிவாரி பிரிவினைப்படி தமிழ்நாடு தனியாக அமைக்கப்படும்வரை புதுவையை தனி மாநிலமாகக் கருத வேண்டும்.

(4) அரசியல் கட்சி பெயரால் நிற்பவரை எதிர்க்க வேண்டும்.

'புகுத்தியவரே கண்டிக்கும் புதுமை ஏன்?'

'இந்தி—வடமொழியையும் ஏற்போம்!'

ஆனல்...! ஆனல்...! ஆனல்...!

'அகில உலகத்துடன் தொடர்பு கொள்ள—விஞ்ஞான அறிவைப் பெற இந்தியால் முடியுமா?'

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

"இந்தி மொழியை இந்த நாட்டு மக்கள் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்று புகுத்திய அதே ஆச்சாரியார்—இன்று, 'ஏக பாஷை வெறியர்களின் பைத்தியம் இவ்வளவு சீக்கிரமாகவா முற்ற வேண்டும்?'—என்று, வடஇந்திய இந்தி வெறியர்களைக் கண்டித்திருக்கிறர்; 15 ஆண்டுகளுக்கு முன்பு அவர்தான் இந்த நாட்டில் இந்தியை கட்டாய பாடமாக்கினர்; இன்று, 'அகில இந்திய உத்தியோக பரீட்சைகள் இந்தியில்தான் நடத்தப்படும்,' என்று இந்தி வெறியர்கள் கூச்சல் போடும்போது, 'தமது இனத்தவர் பாதிக்கப்படுகிறர்கள்,' என்று தெரிந்ததும் கண்டனக் குரல் எழுப்புகிறர்;

"வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் புகுத்திய ஆங்கிலம், சரியாகவோ தவருகவோ, இன்று அகில உலகப் பொது மொழியாகிவிட்டது; ஆங்கிலம், உலகத்தவரோடு தொடர்புகொள்ள, கட்டாயமாகக் கற்றுத் தீரவேண்டிய மொழியாகி விட்டது;

"சென்னையைப் பொறுத்தவரையில், இந்த நாட்டவரின் அன்ருட வாழ்க்கைக்கு தமிழ் போதுமானது; அங்காடிக் கடை வியாபாரம் தொட்டு, ஆட்சி செய்யும் சட்டசபைவரை—நீதி மன்றங்கள் உட்பட—நடவடிக்கைகளுக்கு தமிழ் மொழி போதுமானது—நிச்சயமாக!

"ஆனல், தமிழ் மொழியின் துணைகொண்டு உலகத்தில் வளர்ந்தோங்கியிருக்கும் விஞ்ஞான அறிவைப் பெற முடியாது; உலகத்தின் பல்வேறு நாட்டவரோடு தொடர்பு கொள்ள முடியாது; அதற்காக, உலகத் தொடர்பு கொள்ளவும், நவீன விஞ்ஞான தொழில் அறிவைப் பெறவும் வேறு ஒரு மொழி நமக்குத் தேவைப்படுகிறது; அந்தத் தேவையான வேறு ஒரு மொழியாக இந்தி இருக்க முடியுமா? இந்தி மொழியின் துணைகொண்டு, உலகத்தவரோடு—லண்டனேடு—நியூயார்க்கோடு—மாஸ்கோவோடு—பீகிங்கோடு தொடர்புகொள்ள முடியுமா? வளர்ந்துள்ள விஞ்ஞான அறிவினைப் பெற இந்தி மொழி துணை செய்ய முடியுமா?

"'முடியாது'—என்று திட்டமாகக் கூறலாம்; ஆச்சாரியாரே கூறியிருக்கிறர்; ஆங்கிலம் போன்ற வளமுடையதல்ல, இந்தி! 'தமிழ் மொழிக்காவது சமமானதா?' என்ருல், 'இல்லை'; என்று தெரிவித்திருக்கிறர்.

"அது மட்டுமல்ல; இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும்கூட, உலகத்தோடு தொடர்பு கொள்ள கட்டாயமாக ஆங்கிலம் கற்றுத் தீரவேண்டியவர்களாயுள்ளனர். டாக்டர் இராசேந்திர பிரசாத் முதலிய வடநாட்டுத் தலைவர்களில் பெரும்பாலானேரும், பல்வேறு பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாக்களில் பேசும்போது, 'நாம் ஆங்கிலத்தை இழந்துவிட முடியாது; புறக்கணித்துவிட முடியாது,' என்றே பேசிவந்திருக்கின்றனர்; அப்படியானல், இந்தத் தென்னட்டு மக்கள் என்ன அவசியம் கருதி, இந்தி படிக்க வேண்டும்?

"தமிழ் நிறைவேற்றித்தராத காரியங்களை எந்த ஒரு மொழி நிறைவேற்றித் தருமோ, அந்த மொழியை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேம். தமிழுக்கில்லாத பண்பும், தமிழ் நிறைவேற்றித் தராத காரியங்களை நிறைவேற்றித்தரும் ஆற்றலும் இந்தி மொழிக்கு என்ன இருக்கிறது? இந்தி ஆதரவாளர்களும், காங்கிரஸ்காரர்களும் சிந்திக்க வேண்டும்.

"இந்த நாட்டிலே, தாய்மொழியாயுள்ள தமிழையே எழுதவோ, படிக்கவோ தெரியாதவர்கள் 100-க்கு 76 பேர் உள்ளனர்; இந்த நிலையில் இருக்கும் மக்கள் வாழும் பகுதியில், இரயில்வே நிலையத்தில் இந்தியில் பெயர், தபால் 'கார்டி'ல் இந்தி, பணம் அனுப்பும் நமூனவில் இந்தி—இது அவசியந்தான?

"தமிழ் மொழியில்—தாய் மொழியில், 'சிங்கப்பெருமாள் கோவில்' என்றெழுதியிருப்பதையே படித்துத் தெரிந்து கொண்டு இரயிலைவிட்டு இறங்க முடியாமல் இருக்கும் மக்கள்—ஏதோ பட்டி மாடு போல, பழக்கத்தினலேயே சில பல அடையாளங்களைக் கண்டு, 'இதுதான் நமது ஊர்,' என்று தெரிந்து இரயிலைவிட்டு இறங்குகிற மக்கள் வாழும் பகுதியில், இந்தியில் ஊர் பெயரை எழுதுவானேன்? என்ன அவசியத்திற்காக இங்கு இந்தி எழுதப்பட்டிருக்கிறது?—இவைகளுக்கெல்லாம் காரணம், இந்த நாட்டில் வடநாட்டவரின் ஆதிக்கம் பரவி நிலைத்திருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு அல்லாமல் வேறு எந்த அவசியத்திற்காக இருக்கமுடியும்? அருமை காங்கிரஸ் நண்பர்கள் இதற்குப்பதில்கூறுவார்களா?"

என்று பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை முத்தியாலுப்பேட்டை முத்தமிழ் மன்ற முதல் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி காசி விசுவநாதர் கோவில் திடலில் 6—5—55 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பொதுக் கூட்டத்திற்கு தோழர் கா. அப்பாதுரையார் தலைமை தாங்கினர். தலைவர் முன்னுரைக்கு அடுத்து ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

தஞ்சை மாவட்டத்தில் இரு புதிய கல்லூரிகள்

வருகிற ஜூன், ஜூலை மாதங்களில், தஞ்சை மாவட்டத்தில் இரண்டு புதிய கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுமென்றும், அதற்கு, சென்னை பல்கலைக் கழகமும் சர்க்காரும் அனுமதி தந்துவிட்டன என்றும் தெரியவருகிறது.

சத்திரம் நிதிப் பணத்தின் ஆதரவுடன் தஞ்சை நகரில் ஒரு கல்லூரியும், மற்றொன்று மாயவரத்திலும் திறக்கப்படுமாம்.

'இந்தி நுழைவால் தமிழருக்கு பாதகமேற்படும்'

அவகாசம் காணது-அவசரம் கூடாது!

இந்தி வெறியர்களுக்கு காமராசர் எச்சரிக்கை

தக்க தருணத்தில் செயலாற்றுவோமென உறுதி

சென்னை, மே 6—

"அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிற காலவரையறைக்குள் ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இந்தியைப் புகுத்திவிட வேண்டும் என்று வற்புறுத்துகிற முயற்சி, இந்தி பேசாத இதர பகுதிகளை—குறிப்பாகத் தமிழகத்தைப் பெரும் பாதகமான நிலைக்குக் கொண்டு செல்லும்.

"அகில இந்திய உத்தியோகங்களுக்கான பரீட்சையில் இந்தியையும் ஒரு பாடமாக வைப்பது என்ற மத்திய அரசாங்கத்தின் முடிவு பற்றி சென்னை அரசாங்கம் தகுந்த நேரத்தில் செயலாற்ற முனையும்.

"'15ஆண்டுகாலத்திற்குள் இந்தியை ஆங்கிலத்தின் இடத்தில் அமர்த்திவிடலாம்,' என்று ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது; ஆனல் இதுவரை நாம் பெற்றுள்ள அனுபவத்திலிருந்து இந்த கால வரையறை போதுமானதல்ல என்பது இப்போது தெரியவருகிறது,"

—என்று சென்னை முதன் மந்திரி காமராசர் பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்திருக்கிறர்.

'மாநிலமொழிகள் பெறும்மாண்பால்தான் இந்தி மொழி தழைக்க முடியும்!'

'தமிழ்நாட்டில் தமிழே ஆட்சி மொழியாக வேண்டும்!'

காகா கலேல்கார் தரும் கருத்து

கர்னூல், மே 6—

"இந்தி மொழிக்காக வாதிடுவோர், முதல் முதலாக, மாநில மொழிகள் தங்களுக்குரிய நியாயமான இடத்தைப் பெற அனுமதிக்க வேண்டும்; அதன் பின்னர்தான்—அதனுல் மாநில மொழிகளுக்கு ஏற்படும் திருப்தியையும், பலத்தையும் கொண்டு தழைக்கவும், அரசாங்க அலுவல் மொழியாக இருக்கும் ஆங்கிலத்துடன் போரிடவுமான ஆற்றலும் இந்தி மொழிக்கு ஏற்படும்."

—இக்கருத்தை நிருபர்களிடம் காகா சாகேப் கலேல்கார் கூறியுள்ளார்.

"சாதாரண மக்களின் எதிர்ப்பைத் தவிர்க்க விரும்புவதானல், மக்களின் மொழியின் மூலந்தான், அரசாங்கக் காரியங்கள் நடைபெற வேண்டும்" எனவும் அவர் அறிவித்துள்ளார்.

"நமது அரசியல் சட்டம் இந்தியை அரசாங்க மொழியாக ஒப்புக்கொண்டிருப்பதால், அப்பிரச்சினையில் இரண்டு கருத்து இருக்க நியாயமில்லை; ஆனல் அவ்வேற்பாட்டை எப்படி செயல்படுத்துவது என்பதுதான் பிரச்சினையாகும்," என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:—

"பெரும்உறுதிப்பாட்டுடன் தென்னிந்தியாவில் இந்தியைப் பரவச்செய்ய அரிய முயற்சியை மேற்கொண்ட இராஜகோபாலாச்சாரியார் இந்தி பற்றி இப்பொழுது கூறியுள்ள கருத்தை நன்கு மதிக்க வேண்டும். தங்களுடைய உயிர் நண்பர் ஆச்சாரியார் என்பதை இந்தி மொழியினர் நம்பவேண்டும்;

"மேற்கொண்டு ஒரு காலக்குக் கூட அரசாங்க அலுவல் மொழியாக ஆங்கிலம் நீடிப்பதை, நான் தனித்த முறையில் ஏற்கவில்லை;

"மக்களின் மொழிகள் குறித்து நாம் அச்சங்கொள்ளக் கூடாது. ஒற்றுமைக் குறைவை உருவாக்குவதற்கென மாநில மொழிகள் இருக்கவில்லை. மக்களை அணுகுவதற்கு அவைதான் சிறந்த சாதனங்களாகும்."

"மொழி வழி மாநிலங்களாக நாட்டைப் பிரிக்கத் தேவை இல்லை. ஆனல் மக்கள் வழங்கும் மொழிதான் அரசாங்க மொழியாக இருந்தாக வேண்டும்;

"தமிழ் நாட்டில், கல்வித் துறைக்கு எது பயிற்சி மொழியாக இருந்த போதிலும், அரசாங்க அலுவல் மொழியாகத் தமிழ்தான் இருந்தாக வேண்டும்;

"சாதாரண மக்களை பலமுறச் செய்வதின் மூலம்தான், இந்தியாவின் ஐக்கியத்திற்கு நாம் பாடுபட முடியும். ஆங்கிலம் கற்ற மக்களின் தலைமையைப் பின்பற்றும் பலக் குறைவுடைய கற்றறியாத சாதாரண மக்கள், இந்தியாவின் ஐக்கியத்திற்கு உழைக்க மாட்டார்கள்;

"ஆங்கில மொழிக்கோ, அதன் வளமுள்ள இலக்கியங்களுக்கோ, நான் எதிர்ப்பாக இல்லை. உலக விவகாரங்களில் ஆங்கிலம் பயன்படுத்தப்படுவதை நான் ஒப்புகிறேன். நமக்குள்ள ஆங்கில அறிவு, நமது அரும்மூலதனமாகும். அதை விரயமாக்கக் கூடாது; விஞ்ஞானப் பயிற்சிக்கும் உலக உறவுக்கும், அவ்வறிவை நாம் பயன்படுத்த வேண்டும். ஆனல், அரசாங்க அலுவல் மக்கள் மொழிகளில்தான் நடைபெற்றாக வேண்டும்."

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7—5—'55 சனி

வாழ்விலோர் திருநாள்!

மனிதர்களுடைய வாழ்க்கை எனும் பொய்கையில் விசாரம் எனும் நஞ்சு கலக்கப்படாத பருவமான வாலிபப் பருவத்தில்—'சந்தனக் காட்டைக் கடந்து குளிரும் மணமும் பரப்பி மக்களை மகிழ்விக்க வருகின்றதே, தென்றல்; அதைப் போன்றது வாலிபம்,' என்று நமது அண்ணா அவர்கள் கூறுவதுபோல, இனிமை மிகுந்த வாலிபப் பருவத்தில், ஒரு முறை மட்டுமே பூரண மகிழ்வுடன் நிகழக்கூடிய சம்பவம் திருமணம்.

குழந்தைகளாய்ப் பிறந்து, அன்னையின் மடியிலே பாலுண்டு வளர்ந்து, தவழ்ந்து, தத்தி நடந்து, தத்தை மொழி பேசித் துள்ளித் திரிந்து, பள்ளியில் பயிலும் பருவம் தாண்டி, வாலிபப் பருவத்திற்கு வரும்போது, ஆண், பெண்ணொருத்தியின் துணையுடனும் பெண், ஆணொருவனின் துணையுடனும் இணைந்து வாழ வேண்டும் என்று இயற்கை விதிக்கிற மீறமுடியாக் கட்டளையை நிறைவேற்றுகிற சம்பவம்தான் திருமணம் என்ற சொல்லின் உள்ளடக்கம்.

'வாழ்க்கைத் துணை நலம் கோடல்' எனும் பொருள் பெறும் திருமணம் உலக மனித சமுதாயத்திற்குப் பொதுவானது.

ஆனால் அந்த திருமணம் எப்போது, எப்படி நடைபெற வேண்டும் என்பதில் மனித சமூகத்தின் பல்வேறு இன, மொழி, நாகரீகப் பிரிவினரிடையே எண்ணற்ற வேறுபாடான கருத்துக்கள் நிலவுகின்றன.

திருமணம் செய்யப்படும் பருவமும், முறையும், நெறியும், நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம்—ஏன், இன்னும் இந்த நாட்டின் இழிநிலைக்கு எடுத்துக்காட்டான பல சாதிகளுக்குள்ளேயுங்கூட வேறுபட்டிருப்பது கண்கூடு.

இயற்கை, மனித சமூக வளர்ச்சிக்கும் நன்மைக்குமாக விதித்துள்ள கட்டளையான 'கூடி வாழ்தல்,' மனித சமூகத்தின் விரிந்த வளர்ச்சியின் பல்வேறு கால கட்டங்களில் முரண்பாடான புதுப் புது உறவு முறைகளுடன் மேற்கொள்ளப்பட்டும் வந்திருக்கிறது.

'கூடி வாழ்தல்' — 'திருமணம்' என்பது, அதில் ஈடுபடுகிற ஆண்-பெண் என்ற தனிப்பட்ட இருவருக்கு மட்டுமே 'சொந்த உறவு' என்ற நிலைக்கும் அப்பால், அந்த 'சொந்த உறவு' முழு மனித சமூகத்தின் ஈடு எடுப்பற்ற எதிர்கால வளர்ச்சிக்கும் உரிய ஒன்று என்ற முதிர்ந்த அறிவு, அறிவுக் காலத்தில் உலவும் இன்றைய மனித சமூகத்தின் கோடானு கோடி அங்கங்களாலும் உணர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறிவிட முடியாது.

அதுவும் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் கோடிக் கணக்கானோரிடை 'திருமணம்' என்பது, ஒரு ஆண் மகனுக்குப் பெண் ஒருத்தியை அடிமையாக்கும் 'புனித காரியம்' என்ற எண்ணம்தான் வேரூன்றி இருக்கிறது.

'இன்னாருக்கு இன்னாரை 'கன்னிகாதானம்' செய்து தருவதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு...........' என்பதுதானே, திருமண அழைப்புகளில் காணக் கிடப்பவை.

ஆணும், பெண்ணும் நாட்டின் இரு கண்கள் என்ற தெளிவு பெறாத மக்களைக் கொண்டுள்ள இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், 'பெண்களை ஆண்கள் அடிமை கொள்ளும் புனித காரியமான' திருமணம், எண்ணற்ற வேறுபாடான நடைமுறைகளுடன் நிறைவேற்றப்படுவதில் ஆச்சரியமேதுமில்லை.

திருமணம், இந்த முறையில்தான் நடத்தப்பட வேண்டும் என்பதற்கு, பல பகுதி மக்களும் பல வகையான நடைமுறைகளை கைக்கொண்டு வருகின்றனர்.

இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் காங்கிரஸ் ஆளவந்தார்கள், இந்த நாட்டு மக்கள் எந்தப் பருவத்தில் திருமணம் செய்து கொள்ள வேண்டும், திருமணம் செய்துகொள்ளுகிற ஆண் - பெண் இருபாலாரின் உரிமைகள், கடமைகள் என்ன என்பன போன்ற பலவற்றை எல்லாம் நிர்ணயிக்கிற வகையில் மசோதா ஒன்று கொண்டுவந்து சட்டமாக்கியுள்ளனர்—டெல்லி மக்கள் சபையில்.

அந்த மசோதாவில், குறைபாடுகளே இல்லை என்று கூற முடியாவிட்டாலும், மசோதா, 'ஆணுக்கு, பெண் அடிமையாவதுதான் திருமண உறவு' என்றுள்ள பழைமைக்கு குழி பறிக்கும் நோக்கமுடையது என்பதற்காக, அதனை நல்லெண்ணம் கொண்டோர் வரவேற்கவே செய்வர்.

அந்த மசோதாமீது நடைபெற்ற விவாதத்தின்போது, வடநாட்டிலிருக்கும் இந்து மத சனாதன வெறியர்கள் சிலர் 'தென்னாட்டில் நடைபெறும் திருமணங்கள் 'சாஸ்திரீயமான'வை அல்ல, என்றும் அவற்றை இந்து சட்டம் அனுமதிக்கிறது. அவ்வாறு, சாதி அல்லது குல வழக்கப்படி செய்யும் 'புனித' மற்ற திருமணங்களை அனுமதிப்பதை ரத்து செய்ய வேண்டும் என்று பேசியிருக்கின்றனர்.

இந்த பழைமை வெறியர்கள் திருமணம் என்ற சொல்லின் உள்ளடக்கமே புரியாதவர்கள் என்பதற்காக நாம் அவர்கள் மீது அனுதாபங் கொள்கிறோம்.

அந்த வெறியர்களின் கூற்றுக்கு பதிலளித்த சட்ட மந்திரி, 'வேறு எத்தனையோ பிரச்சினைகளில் இருப்பதைப் போல திருமண விஷயத்தில் கூடவா தென்னாடு வடநாடு என்ற வேறுபாடு?' என்று கூறியிருக்கிறார்.

'இதில் கூடவா?' என்ற வாசகத்தின் உள்ளே, 'வேறு பல பிரச்சினைகளில் வேறுபாடு உண்டு,' என்ற உண்மை தொக்கி நிற்கிறது.

அந்த உண்மை உணர்ந்து உரைத்த அவரைப் பாராட்டுகிறோம்.

'திருமணம்' எந்த நோக்கத்திற்காக என்பதை உணரும் பகுத்தறிவுவாதிகள் திருமணத்தில், 'வழக்கம், பழக்கம், புராணம், சாஸ்திரம்' என்ற பெயர்களுக்காக நடைபெறும் தேவையற்ற மூடச் சடங்குகளையும், அவற்றால்தான் திருமணம் 'புனிதம்' பெறும் என்ற பொய்யுரையையும் நிச்சயம் மறுத்துவிடுவர்.

"திருமண விழாவே 'இந்து மத வேத'ப்படி ஆணுக்குப் பெண் ஒருவள் தானம் தரப்படுவதுதான்" என்ற எண்ணங்கொண்ட பழைமை வெறியர்கள், தென்னாட்டில் நிகழும் திருமணங்களின் 'புனித'க் குறைவு பற்றிப் பேசியிருப்பது வியப்புக்குரியதல்ல!

இந்தியத் துணைக்கண்டத்து மக்களுக்கு—குறிப்பாகப் பெண்களுக்கு இந்த மசோதா வந்த பிறகாவது, திருமண விழா, வாழ்விலோர் திருநாளாக விளங்க வேண்டும் என்பது எம் அவா!

பயிர் காக்கும் முறை

கொழும்புத் திட்ட உதவியில் இந்தியர்களுக்குப் பயிற்சி

பயிர் நோய்கள், களை படர்தல், பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் இவை பற்றி நுணுக்கமான ஆராய்ச்சியும், இவற்றைத் தடுக்கும் முறைகளும், இயந்திர சாதன வசதிகள் ஆகியவை பற்றித் தெரிந்து கொள்ளவும், மருந்து வீசும் இயந்திர சாதனங்களைக் கையாளப் பயிற்சி பெறவும், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா நாடுகளைச் சேர்ந்த 14 - நிபுணர்கள் ஓர் கேம்பிரிட்ஜ் தொழிற்சாலையின் விருந்தினராக பிரிட்டனில் தங்கியிருக்கிறார்கள்.

இங்கிலாந்திலுள்ள பல கிராமங்களில் ஒரு சாகுபடி காலம் தங்கி, மருந்து வீசும் முறைகளையும், இதர பாதுகாப்பு முறைகளையும் நேரில் கண்டு தெரிந்துகொள்ள பயிற்சியாளர்களுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

வீட்டிலிருந்து பணி மனைக்கு!

'ஹெலிகாப்டரி'ல் சவாரி

ஒரு பிரபல பிரிட்டிஷ் விமானத் தொழிற்சாலையின் பிரதான நிர்வாகியான திரு. ரிசார்ட் ஃபேரி அன்றாடம் தமது வீட்டிலிருந்து 15 மைல்களுக்கு அப்பாலுள்ள காரியாலயத்திற்கு ஹெலிகாப்டரில் செல்கிறார். பிரயாண நேரம் பத்தே நிமிடங்கள்தான் தொழிற்சாலைக்குள் ஹெலிகாப்டர் இறங்குமாறு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

'எல்லா மக்களுக்கும் பயன்பட வேண்டும்'

50,000 பவுன் மதிப்புள்ள நகர மன்றம் நன்கொடை!

சுமார் 50,000 பவுன் மதிப்புள்ள நகர மன்றத்தை, தங்கனீகாவில் பரம்பரையாக வாழ்ந்துவரும் கரீம்ஜி குடும்பத்தினர், நகர சபைக்கு நன்கொடையாக அளித்திருக்கிறார்கள்.

"இனமத பேதமின்றி தார்-எஸ்-சலாம் நகர எல்லைக்குள் வசிக்கும் எல்லா மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்ற ஆசையுடன் இதை வழங்குகிறோம்," என்று திரு. யூசப் ஆலி கரீம்ஜி கட்டிடத் திறப்பு விழாவன்று கூறினார்.

'காலத்திற்கேற்றவாறு மாறுதல் வேண்டும்'

மதவாதிகளுக்கு நேரு அறிவுரை

"இந்துச் சட்டம், என்றுமே கடினமான விதி முறைகளைக் கொண்டதாக இருந்தது கிடையாது; கால மாறுதலுக்கு ஏற்ற முறையில் திருத்தி அமைப்பதற்கேற்றவாறு உள்ள விதிமுறைகளே இந்து சட்டங்களில் உள்ளன; ஆகவே, 'இந்துச் சட்டத்தை மாற்றக் கூடாது,' என்று வாதிடுவது சரியல்ல," என்று பண்டித நேரு, மக்கள் சபையில் இந்து திருமண மசோதாவை ஆதரித்துப் பேசுகையில் கூறினார்.

"சீதையும், சாவித்திரியும்தோன்றிய நாட்டில் இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வருவது கூடாது" என்ற முறையில் பேசிய தாண்டனுக்குப் பதிலளிக்கும் தோரணையில் நேரு, மேலும் கூறியதாவது:—

"சீதையின் பெருமை, சாவித்திரியின் மகிமை ஆகியவை பற்றி நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால், இதுபோன்ற புனித வாழ்வு, பெண்களுக்கு மட்டுமேதான் இருக்க வேண்டுமென்ற நிலை கூடாது; ஆண்களும் இராமன் போல், சத்தியவான்போல் வாழ வேண்டும்," என்றார்.

இந்து திருமணம் என்பது ஒரு மத சம்பந்தமான காரியம் என்பதையும், புனிதமானது என்பதையும் தான் ஒப்புக்கொள்வதாகவும், ஆனால், திருமணம் என்பது மனித வாழ்க்கையை உள்ளடக்கிய ஒன்று என்பதை நாம் உணர வேண்டும் என்றும் நேரு குறிப்பிட்டார்.

"இந்த மசோதாவால்புனிதமான இந்து திருமண முறை நாசமாகிப் போய்விடும்," என்று கூறிய என். சி. சாட்டர்ஜிக்குப் பதிலளிக்கும் வகையில்தான் நேரு மேற்கண்டவாறு கூறினார்.

இந்த மசோதா, அவசரத்தில் கொண்டுவரப்படவில்லை என்றும், பல ஆண்டுகளாக மக்களின்முன்பு இது வைக்கப்பட்டிருக்கிறது என்றும், மசோதாவின் எல்லா அம்சங்களையும் நன்கு ஆலோசித்திருக்கிறோம் என்றும் பண்டித நேரு குறிப்பிட்டார்.

மூன்றாவது வாசிப்பு முடிவுற்ற பின்னர், மசோதா வாக்களிக்கப்பட்டு சட்டமாயிற்று.

மசோதாவை ஆதரித்து அனைவரும் வாக்களித்துள்ளனர்; எதிராக இந்து மகா சபையின் தலைவர் தேஷ்பாண்டே ஒருவர் குரல் மட்டுமே கேட்டதாம்!

★

'மன்ற'த்தில் கேட்டவை!

'விவாக ரத்து செய்துகொள்ளும் ஆணுக்கு, பெண், போதிய நிதி உதவி செய்ய வேண்டும்,' என்று இந்து திருமண மசோதாவில் உள்ள விதியை, சபையில் பலர் எதிர்த்தனர்.

"இப்படி, ஆணுக்குப் பெண் ஜீவனாம்சம் கொடுப்பது, தொழிற்சாலை சட்டத்தின் கீழ், ஆண்கள் பிரசவ கால அலவன்ஸ் கேட்பதாகும்," என்று, பண்டிட் தாக்கூர் தாஸ் பர்காவா கூறினார்.

உடனே கிஷின்சந்த் சர்மா, "அப்படிப்பட்ட நாள் ஒன்று வரலாம்; அப்போது 'பால்' மாற்றம் செய்ய இயலும்," என்றார்.

"தனது மனைவியிடமிருந்து ஜீவனாம்சம் கேட்கும் ஒரு ஆண் இருந்தால், அவன் ஒரு மனிதன் அல்ல; அவன் ஒரு 'கதவுப் பாய்'" என்று பண்டிட் பர்காவா கூறினார்.

"ஏற்கனவே வாழ்க்கையில் அனுபவம் உள்ளவர்கள் செய்து கொள்ளும் திருமணம் நீண்டகாலத்திற்கு நீடித்து நிற்கும்," என்று பிரெஞ்சு நாட்டு அரசியல்வாதி எம். பிளம் என்பவர் கூறியிருப்பதை கேளப்பன் எடுத்துச் சொன்னார்.

"திருமணம், ஒரே மனைவி, விவாக ரத்து இவைகளிலெல்லாம் சமத்துவம் கேட்கும் பெண்கள், ஏன் ஜீவனாம்சம் கொடுக்கக் கூடாது?" என்று யு. ஆர். பகவத் கேட்டார்.

"நாள்தோறும் கணவன்மார்களின் பணம் பறிபோகிறது; அவர்களைப் பாதுகாக்க வேண்டும்," என்று பகவத் கூறினார்.

"திருமணம் செய்து கொள்ளாத உறுப்பினர்களை விவாக ரத்து பற்றிப் பேச அனுமதிக்கலாமா?" ஏ. எம். தாமஸ் கேட்டார்.

"மனைவியை இழந்த யாரும், திருமணமாகாத இளம் பெண்ணையோ, அல்லது நடுத்தர வயதுடைய பெண்ணையோ திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கக் கூடாது," என்று உதவி சபைத் தலைவர் குறிப்பிட்டார்.

'அடிப்படைக் கொள்கை மாற வேண்டும்'

'இலங்கை இந்தியர் பிரச்சினைக்கு அதுவே வழியாகும்'

ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர் அஜீஸ் கருத்து

கொழும்பு, மே 5—"இலங்கை—இந்தியர் பிரச்சினையில் விவேகமான பலன்கள் காண வேண்டுமானால், இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள் அனைத்துமே மாற்றப்படவேண்டும்,"

என்று, இலங்கை ஜனநாயகக் காங்கிரசின் தலைவராக அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ. அஜீஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

"பிரச்சினைகள் குறித்து 'அரை குறை' பேச்சுவார்த்தைகள் நடத்தி, அதன் மூலம் நல்லதொரு பரிகாரம் காணமுற்படுவதில் எவ்வித பிரயோசனமுமில்லை; அவை, இலங்கைத் தொழிலாளரின் நலன்களை மேலும் பாதிப்பதிலேயே வந்து முடியும்," என்றார்.

குடியுரிமை மனுக்கள் தொடர்ந்து கண்மூடித்தனமாக நிராகரிக்கப்பட்டு வருகின்றன என்பதற்கான நிரூபணங்கள் ஏராளமாகப் பெருகிக்கொண்டே வருகின்றன என்றும், அக்டோபர் ஒப்பந்தத்திற்குப் பின்னர் குடியுரிமை மனுக்களை ஏற்பது வரவர குறைந்துக் கொண்டே வருகிறது என்பது புலனாகிறது என்றும், ஒரு மனு ஏற்றுக் கொள்ளப்படும் அதே நேரத்தில் 3,000 மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன என்றும் தெரிவித்திருக்கிறார்.

★

கொத்தலாவலை எச்சரிக்கை

காலாவதியாகிவிட்ட குடியிருப்பு பர்மிட் வைத்திருப்போரை வளைத்துப் பிடித்து இலங்கையைவிட்டு வெளியேற்றுவதற்காக் கடுமையான உத்தரவுகள் பிறப்பித்துள்ள இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை, 'திருட்டுத்தனமாக இலங்கையில் குடியேறுவோர்—சட்ட விரோதமாகக் குடியிருப்போர் ஆகியோர்—என்று இலங்கைத் தமிழர்களும், முஸ்லீம்களும் தவறாகக் கருதப்படக்கூடும்' என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் எனத் தெரிகிறது.

'தமிழ் மொழியில் அர்ச்சனை கூடாது!'

மந்திரங்கள் மொழி பெயர்க்கப்பட்டால் சிறப்பையும் பலனையும் இழந்துவிடுமாம்!

தஞ்சாவூர், மே 6—

கோவில்களில் தமிழ் மொழியிலேயே 'அர்ச்சனை'கள் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரோபில மடத் தலைவர் அழகிய சிங்கர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டிருக்கிறார்.

குடவாசலை அடுத்த கண்கொடுத்தவனிதம என்ற கிராமத்தில், பக்தர் கூட்டமொன்றில் பேசிய அவர், 'மந்திர'ங்களுக்கும், 'ஸ்தோத்திர'ங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை விரிவாக விளக்கினாராம்.

"சில குறிப்பிட்ட கொள்கைகளுடனும், 'ஆகம'ங்களுடனும் மட்டுமே மந்திரங்கள் ஜெபிக்கப்படும்; 'பஞ்சாட்சரம்,' 'அஷ்டோத்திரம்' போன்ற மந்திரங்களை சீக்கிரமே வேறு மொழிகளில் பெயர்க்க முயற்சிகள் நடக்கக்கூடும்; ஆனால், அப்போது அந்த மந்திரங்கள் தங்களுக்குள்ள சிறப்பையும், பலனையும் இழந்துவிடுகின்றன என்பதை அறிந்துகொள்ள விசேடமான அறிவுக்கூர்மை தேவை இல்லை," என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

குழாய்க் கிணற்று நீர்ப் பாசனம்

வரி விதிப்பு விபரங்கள்

சென்னை, மே 6—

தென் ஆற்காடு ஜோண்டூர் குழாய்க் கிணறு தண்ணீர் தீர்வை விதிகளை சர்க்கார் வெளியிட்டிருக்கின்றனர். இவை 1363-வது பசலியிலிருந்து அமுலுக்கு வருகின்றன.

குழாய்க் கிணறுகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்படும் கீழ்க்கண்ட பயிர் நிலங்களுக்கு, ஏகர் ஒன்றுக்கு ஒரு போகத்திற்கு கீழ் தரப்பட்டுள்ள விகிதப்படி தீர்வை விதிக்கப்படுமாம் :—

கரும்பு : ரூ 60; வாழை : ரூ. 60; வேர்க்கடலை : ரூ. 20; ராகி (கோடைப் பயிர்) : ரூ. 20; மிளகாய் : ரூ. 20; மரவள்ளி : ரூ. 20; நெல் : ரூ. 15; ராகி (குளிர்காலப் பயிர்) : ரூ. 10; மற்றப் பயிர்கள் ரூ 10.

தண்ணீர் தீர்வை, முதல் கட்டணமாகக் கருதப்படும்; விவசாயிகள் இதைக் கட்டத் தவறினால் அவர்கள் கட்டும் நிலவரியிலிருந்து இவை கழித்துக் கொள்ளப்படும்; பின்னர், இவ்விதம் கழிந்த பின் உள்ள பாக்கி நிலவரித் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எந்தக் காரணத்தினாலாவது விவசாயிக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்படவில்லையென்றால், நிலவரி வஜா அல்லது தீர்வை வஜா, நஷ்டஈடு முதலியவை பெற அவ்விவசாயிகள் தகுதியுடையவர்களாக மாட்டார்கள். ஆனால் அத்தகைய விவசாயிகளுக்குத் தண்ணீர் தீர்வை விதிக்கப்பட மாட்டாது.

இந்த விதிகளைப் பொறுத்த வரையில், குழாய்க் கிணறு பாசன ஆயக்கட்டில் உள்ள நிலங்கள் என்றும், ஆயக்கட்டில் இல்லாமல் தாசில்தார் அளிக்கின்ற 'பர்மிட்'டின் நிபந்தனைப்படி நீர்ப்பாசனம் பெறும் நிலங்கள் என்றும் இரு வகைப் பாசனங்கள் பிரிக்கப்படும்.

ஒவ்வொரு குழாய்க் கிணறு ஆயக்கட்டையும் சேர்ந்த நிலங்கள் எவை எவை என்பதை மாவட்டக் கலெக்டர் மாவட்ட அறிக்கையில் தெரிவிப்பார்.

குழாய்க் கிணறுகளிலிருந்து, உறுதி செய்யப்படாத நிலையில் தண்ணீர் விநியோகிக்கப்படும் நிலங்களுக்கு 1933 - மே திங்கள் 8-ந் தேதியிட்ட ரெவினியூ இலாகா விதிகளின்படி தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படும்.

குழாய்க் கிணறு ஆயக்கட்டில் உள்ள நிலங்களில் ஒரு பசலிக்கு ஒரு முறையாவது வெற்றிகரமாகப் பயிரிடப்பட வேண்டும்; இல்லையென்றால், பாய்ச்சப்படும் தண்ணீருக்கு, உறுதியான நிலையற்ற தண்ணீர் விநியோக விதிகளின்படி தீர்வை விதிக்கப்படும். தண்ணீர் விநியோகத்தை நிறுத்தும் உரிமையும் சர்க்காருக்கு உண்டு.

மேற்கண்ட இந்த விதிகளே சென்னை சர்க்கார் தற்போது வெளியிட்டுள்ளவைகளாகும்.

இந்தி குழுவின் தலைவராக

பி. ஜி. கெர் நியமனம்

மக்கள் சபையில் அறிவிப்பு

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தி குழுவின் தலைவராக பி. ஜி. கெர் நியமிக்கப்பட்டிருப்பதாக, மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

குழுவின் வேலைகளில், ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இந்தி படிப்படியாக எப்படி அமருவது, அதற்கான காலவரையறையை நிர்ணயிப்பது என்பதும் ஒன்றாக இருக்கும் என்று கூறப்பட்டதாம்.

குழுவும், அதன் தலைவரும் நியமிக்கப்பட்டிருப்பதற்கான அறிக்கை, பின்னர் வெளியிடப்படும் என்றும் பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

அரசியல் சட்டம் 344-வது பிரிவு இம்மாதிரி இந்திக்கான குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமெனக் கோருகிறது.

குழுவில், அரசியல் சட்டத்தின் 8-வது அட்டவணையில் இடம் பெற்றுள்ள எல்லா மொழிகளின் பிரதிநிதிகளும் இடம் பெறுவர் என்றும் பண்டித பந்த் குறிப்பிட்டுள்ளார்

குழு, தனது அறிக்கையை ஓராண்டிற்குள் தாக்கல் செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்

சர்க்கார் உத்தியோகங்களைப் பொறுத்தவரையில், இந்தி மொழி அல்லாத வேறு மொழியாளர்களின் நியாயமான கோரிக்கைகளையும், நலன்களையும், இந்தியாவினுடைய கலாச்சார, விஞ்ஞான தொழில் அபிவிருத்திக்கும் உரிய மதிப்பளித்து, தங்களின் அறிக்கையை குழுவினர் வெளியிடுவார்களாம்.

துறைமுகத் தொழிலாளர்கள்

போராட்டம்

கூலி உயர்வு கோரினர்

விசாகை துறைமுகத் தொழிலாளர்கள் தங்கள் சம்பள உயர்வுக் கோரிக்கையை நிர்வாகிகள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால் வேலை நிறுத்தம் செய்தனர்.

துறைமுக வேலைகள் நிலைகின்று விட்டன.

தொழிலாளர்கள் தங்கள் தினக் கூலி ரூ. 2—4—0 என்பதிலிருந்து ரூ. 3 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று கோரினர்.

பின்னர், தங்கள் கூலி ரூ. 2—8—0 ஆக உயர்த்தப்படும் என்று கூறியதை ஒப்புக்கொண்டு, வேலைக்குத் திரும்பினர் எனத் தெரிகிறது.

அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற மார்க்கம்

"விவசாயிகளின் துயரம் ஒழிய வழிவகைகள் செய்ய வேண்டும்"

கிராமக் கூட்டுறவு பாங்கி திறப்பு விழாவில் காமராசர்

"சென்னை மாகிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு வீதம் 25 கிராமக் கூட்டுறவு பாங்கிகள் விரைவில் திறக்க சர்க்கார் திட்டமிட்டுள்ளது; அடுத்த நான்கு, அல்லது ஐந்து ஆண்டுகளில் மாகிலம் முழுமையிலுமாக 400 கிராமக் கூட்டுறவு பாங்கிகள் திறக்க முடியுமென சர்க்கார் நம்புகிறது,"

என்று, சென்னை மாகில முதலமைச்சர் காமராசர், கோவைக்கு அருகிலுள்ள துடியலூர் எனுமிடத்தில் கிராமக் கூட்டுறவு பாங்கி ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர், "விவசாயிகளுடைய வருமானத்தை அதிகரிக்கச் செய்து, அவர்களுடைய கடன்கள் தீர வழிவகைகள் செய்தால் ஒழிய எந்த ஒரு அபிவிருத்தித் திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது; இந்த வெற்றியை அடைவதற்கான ஒரே வழி—கிராமக் கூட்டுறவு பாங்கிகளேயாகும்," என்றும் கூறினார்.

ஆந்திர கம்யூனிஸ்டு உறுப்பினர் கட்சியிலிருந்து இராஜினமா!

22 ஆண்டு கட்சியிலிருந்தவராம்!

ஏலூரு, மே 5—

நகர கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினரும், நகர தொழிற் சங்கக் கவுன்சில் தலைவரும், நகரசபை உறுப்பினருமான தாடி அப்பளாசாமி என்பவர், கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து இராஜிநாமா செய்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அவர், கடந்த 22 ஆண்டுகளாக, மேற்கு கோதாவரி மாவட்டத்தில் பிரபல கம்யூனிஸ்டாக இருந்து வருபவராம்.

அவர், தனது நகரசபை உறுப்பினர் பதவியையும் இராஜிநாமா செய்துவிடத் தயாராக இருப்பதாயும் அதுபற்றி அவருக்கும்—கட்சிக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

கேளாக் காதர்கள்!

நெவாடா பாலைவனத்தில், இங்குள்ள சுமார் 500 அடி உயரமுள்ள கோபுரம் ஒன்றிலிருந்து அணுகுண்டு ஒன்று வெடிக்கப்பட்டது. அந்தப் பாலைவனத்தில் செயற்கை முறையில் தோற்றுவிக்கப்பட்ட 'மாதிரி' நகரம் ஒன்றின்மீது இக்குண்டு பிரயோகிக்கப்பட்டதாகவும், அந்நகரம், அணுகுண்டுத் தாக்குதலில் தூள் தூளாகியது என்றும் கூறப்படுகிறது.

சுமார் 2,000 பேர் கலந்துகொண்ட இந்த அணுகுண்டு சோதனைதான் இதுவரையிலும் நடத்தப்பட்ட சோதனைகளுள் மிகப் பெரியது என்று கூறப்படுகிறது.

மேற்படி அணு ஆயுத வெடிப்பின்போது ஏற்பட்ட கண்ணைப் பறிக்கும் ஒளி, அதிகாலையில், வானத்தில் ஒரே ஒளிமயமாகப் பரவியதாம்.

சென்ற 1945-ம் ஆண்டில் ஹிரோஷிமாவில் போடப்பட்ட 40,000 டன் டி. என். டி.-க்குச் சமமான சக்தியுடைய அணுகுண்டைக் காட்டிலும், இந்த அணுகுண்டின் வெடிப்பு இரு மடங்கு அதிகமான சக்தி வாய்ந்ததாக இருந்ததாம்.

சென்னையில்

மோட்டார்சைக்கிள் உற்பத்தி

ஆங்கிலகம்பெனியுடன் ஒப்பந்தம்

சென்னை, மே. 6—

இந்தியாவிலேயே முதல் முறையாக, மோட்டார்சைக்கிள்கள் அவைகளுக்கான இயந்திரப் பகுதிகளைக் கொண்டு இணைக்கப்படுகின்றன.

பிரிட்டிஷ் கம்பெனி ஒன்றின் ஒத்துழைப்புடன், நகர கம்பெனி ஒன்று இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறதாம்.

'ராயல் என்பீல்ட்ஸ்' இயந்திரப் பகுதிகளை இணைப்பதுடன் மோட்டார் சைக்கிள் பாகங்களையும் தயாரிக்க பிரஸ்தாப கம்பெனி முற்பட்டிருக்கிறதாம். இதற்கான திட்டம் ஒன்றை மத்திய சர்க்கார் அங்கீகரித்திருக்கிறதாம்.

தற்போதைய திட்டத்தின்படி மோட்டார் சைக்கிள் பாகங்களில் 25 சத விகிதம் முதல் ஆண்டில் தயாரிக்கப்படும்; இரண்டாவது ஆண்டில் 47½ சத விகிதம் தயாரிக்கப்படும்; ஐந்தாண்டு காலத்திற்குள் எல்லா பாகங்களும் சென்னையில் தயாரிக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டு ஒன்றுக்கு இந்தியாவின் சராசரி தேவை 3,500 மோட்டார் சைக்கிள்களாகும். சென்னை கம்பெனி ஆண்டு ஒன்றுக்கு ஐயாயிரம் மோட்டார் சைக்கிள்கள் தயாரிக்க இயலும் என்று தெரிகிறது. இங்கு தயாரான மோட்டார் சைக்கிள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

இந்தியாவிலேயே மோட்டார் சைக்கிள் பாகங்களை இணைப்பதின் மூலம் 15 சத விகிதம் விலை குறைவு ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீதி நிர்வாகப் பிரிவினை

சர்க்கார் ஆலோசனை

சென்னை, மே 5—

தற்போதுள்ள நீதி—நிர்வாகப் பிரிவினை ஏற்பாடு, சர்க்கார் அல்லது உயர்நீதி மன்ற நிர்வாக உத்தரவின்படியே அமுல் நடத்தப்பட்டு வருகின்றன. இதைச் சட்டபூர்வமானதாக்கவும், அதற்காகச் சட்டங்களை திருத்துவது பற்றியும் சர்க்கார் ஆலோசனை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

பாக். பெண்கள் கண்ணீர் சிந்தினர்!

பேகம் அலியின் நிலை கண்டு கலக்கம்!

பிரதமர் முகம்மது அலி போக்கின் விளைவுகள்!

கராச்சி, மே 6—

பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலியின் முதல் மனைவி பேகம் அமீதியா முகம்மது அலி, தன் கணவர் இரண்டாம் திருமணம் செய்துகொண்ட பின், முதன் முதலாக ஒரு விழாவில் கலந்து கொள்ள வந்திருந்தபோது கூடியிருந்த பெண்களில் பலர் கண்ணீர் சொரிந்திருக்கின்றனர்.

அகில பாகிஸ்தான் பெண்கள் சங்கக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பாக். பிரதமரின் முதல் மனைவியார் கலந்துகொண்டார்.

பிரதமர் முகம்மது அலி இரண்டாம் திருமணம் செய்துகொண்டதை பாக். பெண்கள் வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

ஒரு வார காலத்திற்குள் பேகம் அமீதியாவிற்கு, 'பாகிஸ்தானின் முதல் பெண்மணி என்ற அந்தஸ்தை திரும்பவும் தராவிட்டால் கிளர்ச்சியிலீடுபடுவோம்' என்றும் கூட பாக். பெண்கள் எச்சரித்திருக்கின்றனர்.

விழாவிற்கு வந்த பேகம், மண்டபத்திற்குள் நுழைந்ததும் பேகம் முகமது அலி வாழ்க என்று கூடியிருந்தோர் உற்சாகத்துடன் முழங்கியிருக்கின்றனர்.

ஆனால், சிறிது நேரத்தில் அவர்கள் உற்சாகமிழந்து கண்ணீர் வடித்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் பற்றிய செய்திகளை கராச்சி பத்திரிகைகள் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டனவாம்.

வெட்டுக் கிளி ஒழிப்புக்கு!

பிரிட்டன், இந்தியா உள்பட எட்டு நாடுகளைச் சேர்ந்த ஐம்பது நிபுணர்கள் விரிவான முறையில் வெட்டுக்கிளி படையெடுப்புக்களை ஒழிப்பதில் முனைந்திருப்பதாகத் தெரிகிறது.

அமராவதி அணைக்கட்டு

கோயமுத்தூர், மே 5—

3 கோடி ரூபாய் செலவில் துவக்கப்பட்டிருக்கும் அமராவதி நீர்ப்பாசன திட்டத்தில் இப்போது வேலைகள் முன்னேறி வருகின்றனவாம்.

நதி பாயும் இடத்தில் 3,667 அடி நீளமுள்ள கல்லணை கட்டுவதற்கான அஸ்திவாரம் தோண்டி முடிக்கப்பட்டுவிட்டதாம். அந்த அணைக்கட்டின் இடது கோடியிலும் வலது கோடியிலும் மண் அணை கட்டுவதற்கு அஸ்திவாரம் தோண்டப்பட்டு வருகிறது. இந்த மண் அணை ஒவ்வொன்றின் நீளமும் 1,000 அடி என்றும், அணையின் மொத்த நீர்த்தேக்கம் 2,300 ஏகர் விஸ்தீரணம் என்றும், இதற்கு உடுமலைப்பேட்டை, தாராபுரம் தாலுகாக்களில் ஆயக்கட்டாக 15,000 ஏகர் இருக்கின்றது என்றும், இங்கு தினந்தோறும் 4,000 ஆட்கள் வேலை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அணைத்திட்ட சிப்பந்திகளுக்கான தங்கும் விடுதிகள், மேற்பார்வையாளர்கள் தங்குவதற்கான விடுதிகள், மருத்துவ மனைகள் போன்ற கட்டிட வேலைகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டனவாம்.

தற்போது அமராவதி, ஒரு 'சிறிய நகரம்' போல் காட்சி தந்து கொண்டிருக்கிறதாம்.

இந்த அணையையொட்டி கால்வாய் தோண்டும் வேலையும் கூடவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், திட்டம் முடிவடையுமென குறிப்பிடப்பட்ட காலவரையறையான 1956-ம் ஆண்டு முடிவிற்குள் பூர்த்தியாகிவிடுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவில் விளைச்சல் பெருக்கம்?

காரணம் என்ன?

1953—54-ல், இந்தியாவில், 14 சதவிகிதம் விளைச்சல் பெருகியிருக்கிறது; இதற்கு முந்திய ஆண்டுகளில் தொடர்ந்து வானம் பொய்த்ததால், சாகுபடி பாதிக்கப்பட்டது.

விளைச்சல் பெருக்கத்திற்கு இரண்டு காரணங்கள் கூறலாம்; ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்தில் முக்கிய கவனம் செலுத்தி நீர்ப்பாசன வசதிகள் அதிகரிக்கப்பட்டது; பருவ மழையும் இருந்தது; செயற்கை உர உற்பத்தி பெருகி, விவசாயிகளுக்கும் தாராளமாகக் கிடைத்தது.

சென்னை பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

அடுத்து மன்றத்தின் சொற்பயிற்சிப் போட்டியில் பரிசு பெற்ற தோழர்கள் ருக்மாங்கதன், முபெருமான், எஸ். வி. தம்பி ஆகியோரும், தோழர்கள் சோமு, சி. ஆர். பாலசுந்தரம் ஆகியோரும் சில நிமிடங்கள் பேசினர்.

மன்றச் சார்பில் பொதுச் செயலாளருக்கு வரவேற்பு பாராட்டு இதழ் ஒன்று வாசித்தளிக்கப் பட்டது.

பல கழகங்கள், மன்றங்கள் சார்பில் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பெற்றன.

இறுதியாக பொதுச் செயலாளர் அவர்கள், கூடியிருந்த பல்லாயிரவரின் ஆரவாரப் பேரொலிக்கிடையே எழுந்து அரியதோர் உரை நிகழ்த்தினார்.

★

தொடர்ந்து, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது :—

"கடந்த சுமார் 25 ஆண்டுக் காலமாக வடநாட்டிலிருந்து இங்கு வந்து வட்டிக் கடை வைத்து, நம் தமிழ் மக்களோடு வாழ்ந்து கொண்டிருப்பவர், மார்வாரியும், குஜராத்தியுமான வடவர்களாவர்; அவர்கள், தங்கள் 'தொழில்' கருதியேனும் தமிழ் மொழி அறிவு வேண்டியவர்கள் ; கற்றார்களா அவர்கள், தமிழ்? 'கணக்கை தமிழில் எழுதமாட்டோம் ; குஜராத்தியிலோ, இந்தியிலோதான் எழுதுவோம்' என்கின்றனர் ; அரசாங்கமும், அவர்கள் கணக்குகளைப் பரிசீலிக்க குஜராத்தி மொழி தெரிந்த அதிகாரியை நியமிக்கிறது ; அப்படியிருக்க, 'இந்த நாட்டிலிருந்து வடநாட்டிற்குச் செல்வார்கள்,' என்ற சூழ்நிலையோ, நிச்சயமோ இல்லாத ஒரு சிலருக்காக இங்குள்ள மக்கள் இந்தியை ஏன் படிக்க வேண்டும்?

"வடநாட்டில் — பம்பாயிலோ, ஆமதாபாத்திலோ, டெல்லியிலோ உள்ளவர்களும் உலகத்தோடு தொடர்பு கொள்ளவும், விஞ்ஞானம் முதலிய அறிவைப் பெறவும், இந்தி மொழி அல்லாமல் ஆங்கில மொழியையும் பயின்றாகவேண்டும்.

"அதே போல, நாமும், தமிழ் அல்லாது ஆங்கிலமும் கற்றுத் தீரவேண்டும் ; அப்படியிருக்க, அவர்களும் நாமும், அவரவர் தாய் மொழி மட்டும் அல்லாமல், தேவைக்காக — அவசியம் கருதி கற்றுக்கொள்ள வேண்டிய நிலையிருக்கிற ஆங்கிலத்தின் துணை கொண்டே இருவரும் தொடர்பு கொள்ள முடியாதா? அவர்களுக்கும் — நமக்கும் லண்டனோடு பேச ஆங்கிலம் தேவை; அந்த மொழி கொண்டே அவர்களுடன்—ஆமதாபாத், பம்பாயுடன்—நாம் தொடர்பு கொள்ளக்கூடாதா? முடியாதா? இந்தி எதற்காக இடையில்?

'நம்மைப் பொறுத்தவரையில், தமிழ் நிறைவேற்றித் தராத காரியங்களை நிறைவேற்றித் தரும் மொழியாக —ஆங்கிலமோ அல்லது வேறெந்த மொழியோ—அது இந்தி ஆனாலும், வேறு வட மொழியானாலும்—அது நீக்ரோவ மொழியானாலும் — நாம் கற்றுக்கொள்ளத் தயார்; இந்தி படிக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்துகிறவர்கள், இதனை உணர வேண்டும்—சிந்திக்க வேண்டும்!

"திராவிட நாட்டைப் பொறுத்த வரையில்கூட, மலையாளி, கன்னடியர், தெலுங்கர் ஆகியோர், தத்தமது தாய் மொழி அல்லாது ஆங்கிலமும் கற்றாக வேண்டும் ; நாமும் கூட அப்படியேதான்; அந்த நிலையில், எல்லோரும் கற்றுத்தீர வேண்டிய ஆங்கிலம் கொண்டே ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள முடியும்.

"எனவே, இந்தி மொழி, வடநாட்டில் வளரட்டும்—வாழட்டும்; ஆனால், இங்கு எக்காரணங்கொண்டும் இந்தி மொழி தேவையில்லை.

"இந்தி மொழியை வேறு பல அன்னிய மொழிகளைப் போல், தனிப்பட்டவர்கள் படிப்பதற்கு நாம் தடையாயிருக்கவிரும்பவில்லை; தனிப் பட்டவர்கள் எத்தனை மொழிதான் பயிலட்டுமே—அது பற்றி நமக்கொன்றும் கவலை இல்லை; ஆனால், தேவையோ, அவசியமோ இல்லாத இந்தியை கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.'

மேலும் அவர் பேசியதாவது :—

"ஒரு ஜனநாயக நாட்டில், மக்கள், பல கட்சியினரின் கருத்துக்களைப் பெறுவதற்கு வசதியாகக் கூடுவதற்கான நல்ல பொது இடங்கள், மைதானங்கள் வேண்டும் ; பேட்டைக்குப் பேட்டை நல்ல நூலகங்களும், வாசக சாலைகளும், சாலைகளும், பூங்காக்களும் எவ்வளவு அவசியமோ, அதைவிட அவசியம், ஜனநாயக நாட்டில், மக்கள் கூடுவதற்குத் தேவையான இடம்.

"இதுபற்றி நாம் பன்முறை எடுத்துக் காட்டியிருக்கிறோம். நகர சபையினரும், நாடாளும் சர்க்காரும் இதுபற்றி நல்ல முடிவெடுக்க வேண்டுமென நான் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

"மக்களும், தங்கள் பொறுப் புணர்ந்து, இந்த அவசியமான தேவையை வற்புறுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

"இங்கு எனக்கு முன் பேசிய தோழர்களில் ஒருவர், மாற்றுக் கட்சித் தோழர்கள் இதே இடத்தில் சில நாள் முன் பேசியபோது, 'தி. மு. கழகத்தில் உள்ள ஒரு லட்சம் பேரும் முட்டாள்கள்,' என்று கூறியதாகப் பேசினார். இதுகண்டு கழகத் தோழர்கள் வருத்தப்படவோ, ஆத்திரப் படவோ தேவை இல்லை.

"நாம், 'மாற்றுக் கட்சியினர் நம்மைப் பற்றி என்ன நினைக்கின்றனர்,' என்பதைகவனிப்பதைவிட, 'மக்கள் மன்றம் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறது?' என்பதிலே தான் கவனம் செலுத்த வேண்டும்.

"மாற்றுக் கட்சியினர் கூறுவதையும், நாம் கூறுவதையும் கேட்கும் மக்கள், சிந்தித்துத் தீர்ப்பு வழங்கட்டும்.

"1945-ல் மக்கள் மன்றம் நம்மிடம் காட்டிய ஆதரவை, 1955-ல் குறைத்துக் கொண்டிருக்கிறதா, அல்லது அதிகரிக்கச் செய்திருக்கிறதா என்று பார்த்தால், மக்கள் மன்றம், நமக்கு, அன்றைய நாட்களைக் காட்டிலும் இன்றைய நாட்களில், பன்மடங்கு ஆதரவைத் தந்திருக்கிறது என்பது நன்கு புலனாகும்; எனவே, மாற்றுக் கட்சியினர் பற்றி நாம் கவலைகொள்ளத் தேவை இல்லை.

"நம்மை எல்லாம் 'முட்டாள்கள்' என்று கூறிவிட்டுச் செல்லும் மாற்றுக் கட்சிக் காரர்களை, மக்கள் மன்றம் என்ன, அவர்களை, 'புத்தி சாலிகள்' என்று நினைக்கும்?

"மாற்றுக் கட்சியினருக்கு நம்மை 'முட்டாள்'கள் என்று கூறுவதில் திருப்தியும், மன மகிழ்வும் இருந்தால், அவர்கள் தாராளமாகக் கூறட்டும்; நாம் அவர்களையும்கூட நண்பர்கள் என்றே பெருந்தன்மையுடன் அழைப்போம்."

தென் வியட்நாம் மன்னர் பாவோ-டாயின் படைத் தளபதியான துயன் என்பவரை, பிரதமர் திரு-தின்-தியம் 'டிஸ்மிஸ்' செய்து விட்டாராம்.

இவர், இதுவரையிலும் மன்னரின் படைத் தளபதியாக இருந்து வந்தார்.

கான்பூர் ஆலையில் தீ விபத்து

ரூ. 8 லட்சம் நஷ்டம்

கான்பூரிலுள்ள 'சுதேசி பருத்தி ஆலை'யில் பிடித்துக் கொண்ட பெருந் தீயை, பல மணி நேரம் போராடி தீயணைக்கும் படையினர் தணித்தனர்.

ஆலையைச் சேர்ந்த ஆறு தொழிலாளர்கள் தீயினால் படுகாயப்பட்டிருக்கின்றனர்.

பருத்திப் பொருள்கள், இயந்திரங்கள் ஆகியவை சுமார் 8 லட்சம் ரூபாய் பெறுமான அளவு தீக்கிரையாயின.

நகரில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்திற்கும், இந்த ஆலையில் தீப்பிடித்த பெரு நெருப்பிற்கும் தொடர்பிருக்குமோவென துப்பறியும் இலாகாவினர் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனராம்.

ரிக்ஷாக்கள் ஒழிக்கப்படுமாம்

அமைச்சர் தகவல்

சென்னை, ஏப். 6—

மனிதனை மனிதனே வண்டியில் வைத்து இழுத்துச் செல்லும் ரிக்ஷா வண்டி இழுக்கும் முறையை வருகிற 1957-ம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்குள்ளாக ஒழித்து விட சென்னை மாநில சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

"ஒரு மனிதனை இன்னொரு மனிதன் வண்டியிலிருத்தி இழுத்துச் செல்லும் முறையை காந்தியார் முதற்கொண்டு அனைவரும் கடுமையாகக் கண்டித்தனர் ; எனினும் இம்முறை ஒழிப்பில் சர்க்கார் சற்று நிதானமாகவே நடந்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில், இம்முடிவை அமுல் செய்வதற்கு முன்னர், ரிக்ஷாக்காரர்களுக்கு மாற்று வேலை தரவேண்டிய பிரச்சினையை சர்க்கார் சமாளிக்க வேண்டியதிருக்கிறது. எனினும் இன்னும் இரண்டாண்டுகளுக்குள் இம்முறை ஒழிந்துவிடும் என்று சர்க்கார் நம்புகின்றனர்"

என்று, மாநில போக்குவரத்து அமைச்சர் பி. பரமேசுவரன், சென்னை ஆட்டோ-ரிக்ஷா உரிமையாளர்கள் சங்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை மாவட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

★

"8—5—55 பிற்பகல் 3 மணிக்கு இராயபுரம் 'அறிவகத்'தில், செயற்குழு கூடவிருக்கிறது. மாநில மாநாட்டு நிதி வசூலுக்கான வழிவகைகள் பற்றி ஆராயப்படும்,"

என்று சென்னை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

சென்னை 14-வது வட்டதி.மு. கழக பொதுஉறுப்பினர்கட்கு

"8—5—55 காலை 10 மணியளவில், கிளைக் கழகக் கட்டிடத்தில், சென்னை மாவட்ட புதிய செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்களையும், மாவட்ட துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்களையும் பாராட்டுமுகத்தான் தேநீர் விருந்தளிக்கப்படும்" என்று கிளைக் கழகத் துணைச் செயலாளர் தோழர் தி. ம பாலகிருஷ்ணன் தெரிவிக்கிறார்.

சென்னை 39-வது வட்ட செயற்குழு உறுப்பினர்கட்கு

"9—5—55 இரவு 9 மணிக்கு கழகப் பணி மனையில், செயற்குழு உறுப்பினர்கூட்டம் நடைபெறும்" என்று வட்டச் செயலாளர் தோழர் மா. மோகன் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டம்

☆

உடுமலைப்பேட்டை

பிரேவோ திடலில்

10—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : நி. துரை

பேசுவோர் :

நாஞ்சில் கி. மனோகரன்

கோவை செழியன்

வி. சண்முகநாதன்

ஒத்திவைப்பு

வாணியம்பாடியில் 7—5—55 சனியன்று தோழர் முல்லை—சத்தி (வ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்) அவர்கள் தலைமையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசவிருந்த பொதுக்கூட்டம் எதிர்பாராவிதமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அடுத்த கூட்டத்தின் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

'இந்திய ஒற்றுமை' குலைந்தால் 'சமாதான கீதத்'தின் இனிமை குறையுமாம்!

இந்திய உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் ஓலம்!

"இந்தியா, இதர நாடுகளுக்கு 'சமாதானம், சமாதானம்' என்ற சேதியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. சர்வதேச அரங்கிலே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், சமாதானமாக வாழவும் தன் உழைப்பைச் செலவிட்டு வருகையில், உள்நாட்டில் அமைதி இல்லை என்றால், அது விபரீதமானதாகத் தோன்றும்.

"உள்நாட்டில் ஒற்றுமையற்றிருந்தால், வெளிநாடுகளில்—சர்வதேச அரங்கில், சமாதானத்திற்காக — சந்துஷ்டிக்காக — இந்தியா மேற்கொள்ளுகிற முயற்சிகள் வீணாகிவிடும்,"

என்று, மத்திய உள்நாட்டு மந்திரி பண்டித கோவிந்த வல்லப பந்த், குர்கான் எனும் நகரில் குழந்தைகளுக்கான விளையாட்டு மைதானமொன்றைத் திறந்து வைத்து, 'மகா பஞ்சாப்,' பஞ்சாபி மொழி வழி மாநிலம் ஆகிய கோரிக்கைகளைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"பஞ்சாப் மாநிலம், சுதந்திரப் போராட்ட காலத்தில்—தாயக விடுதலைக்காக உயிர்தந்த வீரர்கள் பலரை ஈன்றெடுத்துத்தந்த மாநிலமாகும். அந்த மாநிலத்தவர் இன்று மாநிலத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துகிறவகையில் நடந்துகொள்வது நல்லதல்ல;

"இன்று பஞ்சாபில் தொல்லைகள் விளைவிப்போர், நாட்டின் நலனுக்கு விரோதமான செயலில் ஈடுபடுபவர்களாவர்.

"மாநில புனரமைப்புக் குழு ஏற்கனவே இங்கு வந்து பலரின் கருத்தையும் கேட்டறிந்து சென்றுள்ளது; அந்தக் குழு அறிக்கை தருகிறவரையில் எவரும் தங்கள் கோரிக்கைகளுக்காக நடவடிக்கையிலீடுபடுவது கூடாது. மகா பஞ்சாப் மாநிலக் கோரிக்கையையோ அல்லது பஞ்சாபி மொழி வழி மாநிலக் கோரிக்கையையோ கொண்டுள்ளவர்கள் நாட்டின் அமைதியைக் குலைக்கும் வகையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது நியாயமற்றதாகும். மக்கள் இத்தகைய செயல்களுக்கு ஆதரவு தரக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்."

பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

மதுரை வருகை

★

15—5—55 மாலை 6 மணிக்கு மதுரை, கீழச்சந்தைப்பேட்டை அண்ணாதுரை இலவசப் படிப்பக விழாவும், தி. மு கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு பாராட்டுக் கூட்டமும், கொண்டித்தொழு தெரு, வைகையாற்றில், தோழர் எஸ் முத்து தலைமையில் நடைபெறும். தோழர்கள் எ கோவிந்தசாமி எம் எல்.ஏ, காஞ்சி-கல்யாணசுந்தரம், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, ஏ. வி. சௌந்திரராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று காலை 7 மணிக்கு, மதுரை இரயில்வே நிலையத்தில் பொதுச்செயலாளர் அவர்கட்கு வரவேற்பும், மாலை 5 மணிக்கு திடீர் நகரிலிருந்து ஊர் வலமும் நடைபெறும்.

* * *

சிதம்பரம் வருகை

17—5—55 அன்று, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கட்கு, தில்லை தி. மு. கழகத்தின் சார்பில் வரவேற்பு கொடுக்கப்படும். தெ ஆ மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்களுக்கு வரவேற்பும், முன்னாள் தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் ஆர். பாலகுருசாமி அவர்களுக்கு நன்றி கூறலும் தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் நடைபெறும். வரவேற்புப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம் எல்.ஏ, சுரதா, பொ. சொக்கலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

[குறிப்பு : 17—5—55 காலை 10 மணிக்கு, சிதம்பரம் வட்டக் குழுக் கூட்டம் நடைபெறும்]

தஞ்சை மாவட்ட தி.மு. கழக உறுப்பினர்கட்கு

"தஞ்சை மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், 15—5—55 ஞாயிறு காலை 10 மணியளவில், அதிராம்பட்டினம் மாவட்டக் கழகப் பணிமனையில் நடைபெறும். மாவட்டக் கழக உறுப்பினர்கள் தவறாது வந்திருந்து யோசனைகள் கூறி சிறப்பிக்க வேண்டுகிறேன். அதுபோது பொதுச்செயலாளருக்கு வரவேற்பு, மாநில மாநாட்டு நிதி, வட்டக் குழுத் தேர்தல் முதலியன ஆய்வுக்கு வரும்,"

என தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

மே தின விழாக் கூட்டங்கள்

☆

சென்னை 35-வது வட்டம்

8—5—55 காலை 8-30 மணியளவில், கழகப் பணி மனையில், தோழர் சோ. இறையரசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் சா. வில்லவன், அ. இளங்கீரன், இரா. அருட்சிவவர்மன், க துரை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

★

ஆரணி (செங்கற்பட்டு)

8—5—55 மாலை 6½ மணிக்கு பிள்ளையார் கோயில் அருகில், தோழர் தசரதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் துரைசாமி, பா சு. மணி, கா. உமர், கா. மு. சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.